இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2015–16

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 13.01.2016

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள்உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின.

எதிர்வரும் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு பாகன்களுக்கான கீழ்கண்ட விளையாட்டுப் போட்டிகள் இன்று நடத்தப்பட்டன.

1. கேரம்போர்டு,
2. சதுரங்கம்,
3. குண்டு எறிதல்,
4. இசை நாற்காலி,
5. சடுகுடு போட்டி,
6. 800 மீ ஓட்டப்பந்தயம்,
7. 100 மீ ஓட்டப்பந்தயம்,
8. இறகு பந்து.

மீதமுள்ள போட்டிகள் பொங்கல் திருநாளன்று நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகன்கள் குதூகலத்துடன் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

